உ

முருகக்கடவுள் துணை.

பலவித வர்ணமெட்டுகளடங்கிய

# சங்கீத நாம பஜனை கீர்த்தனம்.

1146
3.17

OFFICE OF THE REGISTRAR 24 SEP 1917 MADRAS



திண்டுக்கல் தாலுகா வேம்பூர்க் கிராமம் இராமநாதபுரம்

அ. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள்

பாடியதை

முசிரி மகா-ா-ா-ஸ்ரீ வித்வான்

கு. ஆறுமுகம் பிள்ளையவர்களால்

பரிசோதிக்கப்பட்டு

திண்டுக்கல்

ஸ்ரீ அபிராமி விலாசம் பிரசில்

பதிப்பிக்கப்பட்டது.

1917

CR2:417
N17
177879

1146
3.1.7

வேலுமயிலுந்துணை.

# சாத்துகவிகள்.

...OF THE REGI...
24 SEP 19..
MADRA...

முசிறியிலிருக்கும் மகா-௱-௱-ஸ்ரீ வித்துவான், கு. அ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடி ஆசிரிய விருத்தம்

காமணக்கும் புகழிராமநாதபுர மிகவிளங்குங் கருணை வாய்ந்த
பூமணக்குந்தோ ளருணசலனீன்ற சொக்கலிங்கப் புலவன்சொற்ற
பாமணக்குங்கீர்த்தனங்க ளிவைபரிஞர் மனம்விழைந்து பார்க்குந்தோறும்
நாமணக்குஞ்செவிமணக்கு மண்மனக்கு மெனிலினியா நவில்வதென்னே

கன்னி ஜமீன், உடுமலை சரபம் மகா-௱-௱-ஸ்ரீ
முத்துசாமிக் கவிராயரவர்கள் இயற்றியது.

ஆசிரிய விருத்தம்

இலக்கியமிலக்கண மெனப்பகர் பகுப்புடனெழிற் கவிபுணர்க்குமவர்முன்
எனக்குந்தெரிந்தவை தமிழ்சிந்துகொம்மிவகை எம்பிரான் தென்பழனியான்
துலக்கியமுரைக்கு மாதுலனனகிருஷ்ணமால் துளசிமணிமார்பன்மேலும்
சுவைகூர்ந்தகீர்த்தனம் சபைசேர்ந்தபஜனை யோர்சொற்கிசைந் தினிதுசொற்றான்
கலக்கியமடுப்புனற் கயன்மடியின்முட்ட கனிந்து தங்கன்றென்னவே
காரெருமைவழியவிடு பால்வளம்பெறுவயற் காட்சிவெம்பூர்க்கிராமம்
நலத்தியலுமருண சலப்பிரான் சுகுமாரன் நபபதிபுகழதிபதி
நட்பனின்பப்பிரபல சொக்கலிங்கக் குரிசில்நாக ரிகசைவமணியே

திண்டுக்கல் தாலுகா சின்னழகநாயக்கனூர்
மகா-௱-௱-ஸ்ரீ முத்துசாமி நாயக்கரவர்கள் இயற்றியவை.

அறுசீர்க்கழிநெடி ஆசிரிய விருத்தம்

பொன்னுலகுக் கிணைராமநாதபுரங் கங்கைகுலம் பொருந்துஞ்சைவ
நன்னெறிகைக்கொண்டவருண சல வேடராவுதித்த நயகுணாளன்
பன்னுதமிழ்ப் பாவலர்கள்மனமகிழச் சொக்கலிங்கம் பகருந்தீந்தேன்
சொன்னயமிக் கீர்த்தனத்தின் சுவையறிந்துவானவருஞ் சுகமுற்றாரே

கட்டளைக்கலித்துறை

பண்டேரிலக்கணப் பைந்தமி ழோர்ந்து பலவிதமாக்
கண்டேநிகர்தமிழ்க் கீர்த்தனம் செப்பினன் காசினியில்
நண்டேர்வயல் நித்திலம்வீசும் ராமநாதப்புரமார்
வெண்டா மரையவள்வாழ் சொக்கலிங்கநல்விற்பனனே

## கணேசர் துதி.

வெண்பா

சுக்கலாம் பரதரனே சோதிமய மானவனே
விக்கின விநாயகனே வேண்டினேன்—அக்கரையாய்
மைந்தன் றமிழுரைக்க வாக்கருள வந்துதவும்
தந்தி முகத்தோனே சரண்.

## கீர்த்தனம்

இராகம், மோகனம் தாளம் ரூபகம்.

பல்லவி

கஜமுகனே சரணம்     கருணை செய்வாய்

1205
184-00

அநுபல்லவி

தசமுகன் சென்னிகளை தரித்தோன் மருகனே
பஜனைசெய் கீர்த்தனம் பாடவரமருள்வாய் [கஜ]

சரணங்கள்

1. வித்தைக் குவந்தவனே வேலன் சகோதரனே
விளங்கு விநாயகனே வேண்டிவிரும்பினேனே
சத்தியுமையவள் தன் தனயக்கணேசனே
சம்போ சங்கரன் பாலா க்காத்தருள் புரிவாய் (கஜ)

2 மோஷிக வாகனா முன்னோன் கணபதியே
மூலப்பொருளே தேவா முக்கண்ணன் குணபதியே
ஈஸ்பரி பாலகனே வரம்பாவருள் பதியே
எக்காலமுந் துதித்தேன் எந்தனைக்காப்பாயே (கஜ)

3. ஐந்து கரத்தோனே அங்குசனே பாசா
அம்பாள் வல்லபைபாகா அடிதொழுதேனீசா
சிந்தையில் வந்துதித்து சிறப்பாய் வாழ்கின்றவாசா
சேயனசொக்கலிங்கம் செந்தமிழைக்காப்பாயே (கஜ)

[library stamp]

சரஸ்வதி துணை

வெண்பா

அன்னை சரஸ்வதியே பன்புடனே என்னுவிற்
சொன்னபடி தங்கி சுகந்தரவே—நன்னயமாய்
வேதங்களோதும் விமலிகலை வாணியுன்றன்
பாதங்கள் போற்றினேன் பார்

கீர்த்தனம் இந்துஸ்தான் காப்பி தாளம் ஆதி

பல்லவி

தாயே கலைவாணியே எந்தனைக்காப்பாய்

அநுபல்லவி

சேயனே என்னுவிற் சிறப்பாய் அமர்ந்திடுவாய்
ஆயியே நின்பத மண்பாய் நாளுந்துதித்தேன் (தா)

சரணங்கள்

1. தாளக்யானமாகத் தம்பூர் சுதியுடனே
மேளராகத்துடனே மேன்மையாய் பாடிட (தாயே)
2. பக்தியுடனே தானும் பாடித்துதித்திட
சக்தியெனக்குமே தந்துவரந்தருவாய் (தாயே)
3. உன்னையனுதினமும் உருதிநம்பினேன்
அன்னையே எந்தனுக் கருள்செய்ய வந்திடுவாய் (தாயே)

விருத்தம்

கஜமுகன் வாணிசெவ்வேள் கங்காதரன் தேவிமீது
தசமுகன் சென்னிபத்துந் த்ரித்ததோர் மாலின்மீது
நிஜமுள அனுமான்மற்ற நீதிதேவதையின் மீது
பஜனைசெய் கீர்த்தனங்கள் ப்பாடிட வணங்குவேனே

கீர்த்தனம் சங்கராபரணம் ஆதி

பல்லவி

பஜனைகள் செய்திடுவோம் பக்தியாக

அநுபல்லவி

கஜமுகன் வாணிசெவ்வேள் கங்காதரன் கார்மேகன்
நிஜமுடனேவரையும் நித்யானந்தவஸ்துடன் (பஜ)

சரணங்கள்

1. தம்பூர் மிருதங்க சுருதி சரியாக யிருக்கவேணும்
தாளக்கியானங்களும் தவறாமல் சேரவேணும்
இன்பமாயாண்டவன்பேரில் இரக்கத்துடன் துதித்தால்
எமன்வந் தணுகிடான் எம்பெருமானே தினம் (பஜ)

2. காமவிகாரமதைக் கருத்தில் நினைக்கொணுது
சோமவாரம் ஸ்திரவாரம் சுத்தபக்தியாயனு
நேமவலங்காரமாய் நின்று பஜனைசெய்தால்
சேமலாபமுண்டு திருமால்பக்தி கிடைக்கும் (பஜ

3. அல்லும்பகலுமேதான் அரசிவராமாவென்ருல்
இல்லறஞ் சுகவாழவும் இகபர சித்தியதால்
நல்லஎண்ணத்துடனே நத்தி பஜனைசெய்தால்
நாராயணன் பாதம் நமக்குக் கிடைத்திடுமே (பஜ)

முருகன் செயல்.

ஆசரிய விருத்தம்

சிங்காரமானபல நீர்நிலவளமுற்ற திருவாவினங் குடியெனும்
தென்பழனிமலைமீதிற் புகழ்பெற்றிருக்கின்ற சிறந்தபொன்னாலயத்தில்
கங்காதரனுடைய புத்திரசிகாமணி கந்தவடி வேலவாவுன்
கருணைக்கிரங்கியே பாடினேன் தேடினேன் கார்க்கவிது சமயமையா
திங்கண்மலர் முகமுறுந்தெய்வானைவள்ளியின் தேவிமணவாளாவுனை
தினந்தினம்வந்துமே தெரிசிக்குமன்பர்க்கு ஜெயமுண்டு மேன்மையதுவே
தங்கமயின் மீதேறிபொல்லாத தயித்தியரை சம்காரஞ்செய்தமனு
சரவணபவகுகா ஷண்முகநாதனே தாக்காத் தருள்புரிகுவையே

தேவாரம் பண்

திருவாவினங்குடி தனிலே தென்பழனிமலையானே
கருவாயுருவாயமைந்திருக்கும் கயிலையங்கிரியான் தன்சுதனே
பொறுமைபெரும் புண்யவானே புகழ்ந்ததிருமால்மருகோனே
அருமையாயுன்னடிதொழுதேன் அடியேனுந்தனடைக்கலமே
மால்மணக்குமேமலர்பழனி மலையைச்சுற்றிமநேகதானம்
பால்வழியுமேயுன்னகரம் பஞ்சாமிர்தமுனக்குஸ்நானம்
வேல்கரத்தினில்தரித்துக்கொண்டு வெள்ளிமயிலேறுவாய்தீர்மானம்
ஆலகாலவிஷமுடையோ னருமைப்புதல்வாயடைக்கலமே
அரகரமுருகாவென்ருலே அநேகபாவங்கள்போகும்
சரவணபவாகுகாவென்ருலே சகலபிணிகள்தானகலும்
பரங்கிரியோனேபார்த்தாலே பக்திசித்திமுத்திவரும்
கரங்குவித்துநான்பணிந்தேன் கதிர்வடிவேலாயடைக்கலமே

அகித்தன்மதிதஜனும் அருமைப்புகருதெள்ளியாம்
நீகில்கிரவாரங்களில் நேசமுடன்இராப்பகலும்
ஒகினை னைபுன்னையுமே ஊள்வினையையகற்றுநீயும்
வேதியனைவரந்தருவாய் வித்தகனேபடைக்கலமே

கீர்த்தனம் சங்காபரணம் ரூபகம்.

பல்லவி

அப்பாவுன் பொற்பாதஞ்சரணம் குருபர

அனுபல்லவி

செப்பரிய திருப்பழனிப்பதியில் வாழும்
தேவா தேவா தேவா அரஹர (அப்பா)

சரணங்கள்

1. சண்முகநதியினால் சகலபிணிகள் நீங்கும்
சரவணப்பொய்கையால் சர்வபாவங்கள் தீரும்
பண்பாக புன்னையுமே பாதம் பணிந்தோர்க்கு
பாரும் பாரும் பாரும் வினைதீரும் (அப்பா)

2. வையாபுரியழகும் மலைசுற்றி தோப்பழகும்
வள்ளிதெய்வானையுடன் மயிலேறுஞ் சிங்காரமும்
ஐயாவுன் மகிமையை யாராலறியப்போமோ
அருள்தா அருள்தா அருள்தா எழியேற்கு (அப்பா)

3. மாதம் பனிரெண்டு மகிழ விழாக்களும்
மங்களமாகவேதான் மரகதரதமேறும்
வேதா கிருபைகர வீதிவலம் வருவாய்
வேலா வேலா வேலா உனைநம்பினேன் (அப்பா)

கீர்த்தனம் கமாஸ் ரூபகம்

பல்லவி

கொஞ்சமேனுமுன் னெஞ்சமிரங்கலேபா
கோலாகல மயிலேறிடும் குமாரகுரு வடிவேலவா

அனுபல்லவி

தஞ்சமென்றுன்னடி தனையன்றுதித்திட்டேன்
சகலாகலை புலவாசிவா சரவணபவனேயினி (கொ)

1. மெத்த வருத்தமோ இத்தனை நேரமோ
மேல்மலையானே நீ மெய்யான தெய்வமோ
சித்தமுட னென்னை ரட்சிக்க வர்மமோ
சீலா குணபாலா வடி வேலா வரந்தருக வினி (கொ)

2. பக்தியுட னனும் பாடினேன் தேடினேன்
பாங்கி வள்ளிநேசா பணிந்து துதித்திட்டேன்
சக்தியெனக்குமே தந்தருள்செய்வாய் நின்
தாள்பணிய தானேயினி சண்முகனே சற்றுயினி (கொ)

3. என்னவருத்தமோ ஏழை யெந்தன்மீது
ஏதுமறியேனே ஓதுவாயிப்போது
மன்னுதுதிக்க வரந்தரவிப்போது
வாராய் வடிவேலாயுமை பாலா அருள்தாரா யினி (கொ)

கீர்த்தனம் அடாணா ரூபகம்

பல்லவி

நெஞ்சேமிகநீ நினையேதினமே ஜெக
திதனெனும்வேதனை நாதனுட பாதமதை (நெ)

அனுபல்லவி

அஞ்சாமல்மனதினில் தஞ்சமென்றெண்ணினேன்
அத்தன்பரிசுத்தன் கர்த்தனையுதித்தமுமே (நெ)

சரணங்கள்

1. குஞ்சிதெய்வயானை வள்ளியைக்கொஞ்சியே மருவுங்கெம்பிரான் அஞ்சு
பஞ்சவர்ண பஞ்சமீதிலேதானும சூரரைக்கொன்றதீரன்
பஞ்சபண்டாரம்போல் வேடந்தரிப்பவன்
பாலன்குமரன்போலே யிருப்பவன்
அஞ்செழுத்தாயுள்ள வெண்ணீறுதரிப்பவன்
அன்பனையுந் துன்பமற இன்பமரு ளன்பனையும் (நெ)

2. பக்தியுடனுளும் பாடிதுதிப்போர்க்கு பழனிமலைவாசன் திவ்ய
முத்திகள்தந்துமே மோட்சங்கொடுப்பானே முத்தன் குமரேசன்
தித்திக்கத்தினைமாவை தேன்கலந்துண்டவன்
தீராதவல்வினை தீர்த்திடச்செய்பவன்
அத்தியைகார்த்திட்ட ஆயன்மருமகன்
ஆறுமுகமான முருகையனையு மன்புடனே (நெ)

3. அரனார்க்குபதேசஞ்செய்திட்ட மன்னவன்அம்மைதிருச்சேயன் நல்ல
குருபரனென்றுமேநாமத்தையடைந்த குஞ்சரியானநேயன்
பெருக்குந்திருவாவினங் குடிதனிலமர்ந்தவன்
பிரபலமாகவே பெயரைப்படைத்தவன்
அருள்பெறசொக்கலிங்கந் தமிழ்கார்ப்பவன்
அய்யனையு மெய்யுடனே வையாபுரி ஐயனையும் (நெ)

கீர்த்தனம் கமாஸ் அடதாளம்

பல்லவி

தயவுசெய் ஐயா என்
சாமிமுருகை யா

அனுபல்லவி

ஐங்கரன்சோதரா அலங்கார வேலவா
அம்மைபார்வதிக்கி யன்புள்ள பாலகா (த)

சரணம்

1. ஆறுமுகத்தோடு பன்னிருகரத்துடன்
அழகுகழுகாசலம் அமர்ந்துஇருக்கநின்
நாரதமுனிவந்து நான்கண்டேன்கனியென
நவிலவேவேடனுக நடந்தமுருகோனே (த)

2. கருதித்தினைவனத்தில் கன்னிவள்ளியென்ன
கண்டுமொழிபெற கானக்குரவனென்ன
துரிதமாமாவேங்கை சுகமாகத்தானுனய்
துதிக்கும்படிசெய்ய துய்யக்கிழவனுனய் (த)

3. அத்தியைப்போலவே அண்ணனையழைத்திட
அன்னைவள்ளிபயந்து அன்புடன்மணந்திட
எத்திசையினுமுனை எவருந்துதித்திட
ஏழையைக்காத்திட இனியமயிலிலேறி (த)

தேசிகதோடி ஆதி

ஆரடி உன்பேர் ஊர் சொல்லடி என்ற மெட்டு.

பல்லவி

வாரும்வடிவேல் மால்மருகா சற்று வந்து நீ என்மனதில்
சொந்தமாயருள்புரிய (வாரும்)

அநுபல்லவி

ஆருமொருவரில்லை நீயேஎனக்குத்துணை
பாரும்பாருமய்யா பச்சைமயில்வாகனனே

சரணங்கள்

1. அருணகிரியார்க்கருள் அன்பாய்போதித்ததுபோல்
ஆறுமுகநாதாயிப்போ வருள்புரிவாய்
தருணந்தருணமய்யா சண்முகாஉன்னைத்துதித்தேன்
தா தா உனதுபாதம் மேல் மேல் எனக்குத்தானே (வா)

2. மங்கைவள்ளிநாயகிக்கு சிங்காரமாயமர்ந்த
தங்கமயில்வாகனுத் தர்க்கார்த்தருள்வாய்
அங்கமெல்லாமுருக அன்பாகப்பாடினேனே
ஆ ஆ இதுசமயம் ஏன் ஏன் யினித்தாமதம் (வா)

3. உந்தன்மகிமைதன்னை ஒருவரால்சொல்லொணாது
உறுதியாய்நம்பினேன் ஓடிவருவாய்
மைந்தன்சொக்கலிங்கம் வழுத்துஞ்செந்தமிழுக்கு
வா வா வரந்தருக செ செ செவ்வேள்முருகா (வா)

கீர்த்தனம் புன்னாகவராளி ஆதி

பல்லவி

முத்திகள்தருவாயே முருகா மருகா வருவாய் அரஹர (மு)

அநுபல்லவி

பத்தரைமாற்றுள்ள பசும்பொன்னேயுன்னருள் பாலா சீலா வேலா மேலா ()

சரணம்

1. வள்ளிதெய்வானை மகிழ்கின்றநேயா மரகதமயிலில் வரவேணும்சேயா
வுள்ளிவிபூதிதந்து யருள்செய்வீரய்யா ஐயா துய்யா செய்யா மெய்யா (மு)

2. அருணகிரியார்க்கருள்புரிந்தாய் அசுரரெனவவரைவேல்தனில்தரித்தாய்
கருணைபுரிந்திடகாலதாமதஞ்செய்யாய் காப்பாய் பார்ப்பாய் தீர்ப்பாய்
சேர்ப்பாய் (மு).

3. பஞ்சாமர்தமுனக்கு பாதவரைசாத்துவார் பஞ்சாட்சரத்தைபால்போலே
தரிப்பார் (மு)
அஞ்செழுத்துமந்திரமாப்புதபோல்ஜெபிப்பார் அருளா பொருளா
தெருளா யிருள்கெட (மு)

4. கத்தியேதுதித்திட்டேன் கடைக்கண்ணால்பார்ப்பாயே
கருதியசொக்கலிங்கம் செந்தமிழைக்கார்ப்பாயே
சித்திக்கு முத்திக்கும் திருவடிதருவாயே தீரா வீரா சூரா சீராய் (மு)

வர்தனந்தந்தேன் என்ற மெட்டு

பல்லவி

அங்குமுருகோனே இங்குவாகுகனே

அநுபல்லவி

தங்கியென்மனந்தனில்வந்து சந்தோசமதைத்தருவாயே
சரவண சரவண சரவண பவாகுகனே (அ)

சரணம்

1. அயனைமூலங்கள் அருத்தங்கேட்டவா
அவனைகொட்டியருஞ்சிறையிட்டவரும்பொருளோனே
அரஹர அரஹர அரஹர சிவ சிவா (அ)

2. துலாமாதத்தில் தொலங்குஸஷ்ட்டியில்
துரிதமாகமயின்மீதேறி சூரனைவதைசெய்தவா
சுகமது சுகமது சுகமது கொடுக்கவருவாய் (அ)

3. உந்தனிருபாதம் மைந்தன்பணிந்தேன்
உறுதியாகத்துதிப்போர்க்கு ஊள்வினையகற்றுவாய்
உபகாரா உபகாரா உபகாரா யாருக்குமே (அ)

அம்மா மதுரைமீனாக்ஷி என்ற மெட்டு

1. ஐயாபழனிமுரு கேசா உய
ரருமையானமலை வாசா துதித்தே
னன்பர்க்கிரங்குஞ்சர் வேசா அருள்
தரு நேசா (ஐ)

2. நல்ல மையார்கண்டனருள் பாலா வெழில்
வள்ளிதெய்வானை லோலா பணிந்தேன்
வரமீவாய் சீலா வடி
வுள வேலா (ஐ)

3. பெற்ற அரனார்க்குபதேச நீயே நீ
யன்புடனேசெய் தாயே வேலா
அம்மைபார்வதி சேயே உன்
னடிதரு வாயே

4. உன் மைந்தன்சொக்கலிங்க மீது
வஞ்சகவினைப்பது சூது முருகா
வரந்தரவன் வாது மன
தினி லோது

தென்னிலங்கை வேந்தன் என்றமெட்டு

1. சிங்காரமாகவேத் தங்கமயின்மீதேறி
மங்களவேலுடன் பங்கப்படசூரனை
சங்கரித்தஷண்முகா எனைத் தர்க்காத்தருள்முருகா வுனைத்
தஞ்சமென்றேன் நெஞ்சந்தனில் வஞ்சனையில்லாமல்கார்ப்பாய்

2. தினைப்புனந்தன்னிலே வனத்தில்வள்ளிமானென்று
மனதைக்கலைத்துநீ குணமுடன்மருவின
தனவடிவேலவனே சிவ சங்கரன்பாலகனே நீயுந்
தர்க்காக்கவேவாவேலனே ஜாலஞ்செய்யவேண்டாந்தானே

3. எந்தநேரத்தினு முந்தனையானுமே
சிந்தைதனிலெண்ணி மைந்தன்பணிந்தேனே
கந்தாகருணாகரா இனிகார்க்கவாருங்குமாரா விது
காலமய்யா ஏழைநானே கருணைதரசமயமய்யா

மனமயிலேமிட்டே தனசேபடதே என்ற மெட்டு.

1. மரகதமயிலில் அதி
விரைவாயேறி ய
சூரரைக்கொன்ற சூரா
மந்திரனேவெ கு
தந்திரனே எ ணே
வந்துகார்த்திடு தீரா
வருவாயே வருவாயே
அருள்தருவாயே
வரமது ஈ வாய நீ ஜோரா ஹரி மருகா முருகா (மர)

2. ஆலயம்பழனியில் தேவா ஆ
றுமுகமுள பாலா இ
ராறுகரமுள சீலா அ
ன்பானவள்ளியின் வேலா எனே
யருமையானவடி வேலா அரஹரசிவகுஹா வா வா வா
ஆதரித்தாலே எனக்கதுமேலே
அஞ்சிக்கெஞ்சியுனைத்தஞ்சமென்றேனருள்வீரா குமார (மர)

3. நாரதமாமுனி கண்டு
நான்கனிகண்டெ னென்று
நவின்றிடுநீயே என்று
நலமுடவேடனைச் சென்று
நனினவார்த்தையால் விண்டு நங்கைதோளர்வரத்தான் தான் தான்
நத்திடம்ரமானைய் மெத்தக்கிழவனாய்
நலம்பெறஅத்தியை பெலத்துடனனைத்துமணங்கொண்டாய் (மர)

காவடிச்சிந்தில் திருவுற்றிலகுகங்கை என்ற மெட்டு.

1. திருவாவினங்குடியிலருளாயிருக்கின்ற தோர்
தென்பழனிமலைப்பதியின் வாசனே தின
மன்பர்கள் துதிக்குமுரு கேசனே விதி
சிரசுமாறியே வருவாரானவசுரரவரைமடியவேசெய்து
சிங்காரமாய்த்தானிருப்பாய் வேலனே சிவ
சங்கரிமனோன்பணியின் பாலனே

2. கருதிமாமுனியுவந்துகனியைக்கண்டு வந்த தாகவே
கனமுடனேயுந்தனிடஞ்சொல்ல வோ மிக
மனமகிழ்ந்துவேடனைகச்செல்ல வோ உடனே
கன்னிவள்ளியைததினப்புனத்தினிலுன்னிதமாய்ப்பார்த்துஆவலாய்க்
காதலுடன்மருவினவ னல்ல வோ எனே
யாதரவாய்க்காற்கவேணுமல்ல வோ

3. திருவேலழகுமகிமையாகமரகதமயின்மீதேறி
தேவாயென்னைவந்துகாரும் மய்யனே யுனை
ஆவலுடனுன்றுதித்தேன் மெய்யனே நல்ல
சீலாகுராபரவேலாயுமையவள்பாலாயனுதினமேலாவரணுமே
சிந்தையிலேவைத்திடுக ஐயனே நான்
சொந்தமுடனேதொழுவே னைய்யனே

4. அருள்பெறவேசொக்கலிங்கம்பொருமையுடனுன்பணிந்தேன்

அருமுகவாபன்னிருகை நாதனே உன்மேல
சிரிபென்சிந்துபாடினேனே வேதனே தேவ
அரஹர்சிவ சுதனே முருகையாவரந்தருகவினி
அலங்காரமாய்வருகவேணும் போதனே உன்
கலங்காமில்லாப்பொற்சிலம்பின் பாதனே

பாதிராத்திரி என்ற மெட்டு.

1. ஆருமாமுகநாதனேஎனையாதரிப்பதுன் பாரம் அல்லால்
யாரசெய்வாருப காரம் அதை
யறைகுவாயிந்த நேரம் வந்து
அண்டினோர்க்கருளாதிருந்திடலதுவேமெத்த விசாரம்
2. காருலாவியபழனிமாமலைக்கர்த்தனேவந்து கார்ப்பாய் கடைக்
கண்ணிலாகிலும் பார்ப்பாய் மனக்
கவலையோமெத்தத் தீர்ப்பாய் உன்னைக்
கருதுமன்பர்கள்குழாங்களோடிருகழல்பணிந்திடச் சேர்ப்பாய்
3. பரமனுக்குபதேசஞ்செய்திட்டபன்னிருகர வேலா அம்மை
பார்பதிக்கொரு பாலா கடற்
பாருளோர்க்கனு கூலா உந்தன்
பாதம்போற்றிடும்பாக்கியந்தந்தென்னைப்பாதுகாத்திடு சீலா
4. வரமெனக்களியாதிருப்பதுவர்மமோஎன்றன் மீது இங்கு
வந்துரைத்திடப் போது சும்மா
வாதுசெய்வது காது நிதமும்
வந்தனைசெய்யுமெந்தன்றீவினைமாற்றுதற்கென்ன ஓது
5. இந்திரன்முதற்றேவர்தங்களுக்கெண்ணிலாத்துன்ப நீக்கி நிக
ரில்லாச்சூரனைத் தாக்கி மயி
லேறுவாய்வினை போக்கி யரு
ளெந்தனுக்களியாதிருப்பதற்கின்னமுமென்ன பாக்கி
6. சந்ததம்பணிபன்பர்க்கிரங்கிதமிட்கருள்கந்த நாநா மகா
சாதுக்கள்தொழும் பாதா நல்ல
சதுர்பரைபுகழ் வேதா இந்த
தருணமஞ்ஞுமீதாகிலுவந்துதமியனுக்கருள் தாதா

செந்தின்மாநகரந்தனில்மேவிய என்ற மெட்டு.

1. தென்பழனிதனிலன்பர்துதிக்கின்ற
தேசிகனேவடி வேலா தினம்
பூசிப்பவர்க்கனு கூலா நீயுஞ்
சீராசிகியின்மேல் நேராய்வந்துசன் பாராய்பலவினை தீராய்யொருவரங்
தாராயடியேனைக்காராயுன்னிரு
திருவடிதரவேணுஞ் சீலா எனக்
கருமைப்பொருளது மேலா
2. அன்னியமல்லநானுன்னிதமாயெனை
யாதரித்தருள்குக நாதா மிக
சோதிப்பதுதகாது வேதா ஓம்
அரஹரசிவ சரவணபவ பரங்கிரிதேவா அருமுகபூவா
திரமைவேலுடன்பெருமைபெற்ற
ஐயாமுருகய்யா போதா சுக
மெய்யாய்விளங்கும்பொற் பாதா

3. வெள்ளிமயிலேறிவள்ளிசமேதராய்
வீதிவலம்வரு வாயே ஜெக
ஜோதிப்பொருளே நீயே நல்ல
வேதசாஸ்திர மோதுவிதமு பாதம்பணிய சாதுக்கள்வர
போதனைசெய்யநாதாவந்துமே
வெத்திகொடுத்திடு வோனே முருக
லத்திமுகன் றம்பி தானே

4. மாதாபிதாகுருநீதானென் றமால்
மருகாவுன்னிடஞ் சென்றேன் உன்
னருகில்துதிசெய்து நின்றேன் குணா
வந்தனைசெய்யுஞ் சொக்கலிங்கனுஞ் செந்தமிழாலே சிந்துபாடினோ
னெந்தனுக்கொரு சொந்தவரமது
மகிழக்கொடுக்கநீர் வாரும் நாதப்
புகழுடன்றீவினை தீரும்

தங்கமெட்டு.

பால்க்காவடிகட்டிக்கொண்டு பழனிக்குபோகவேணும்
சேல்வழிமுருகனையும் சிந்தையிலேவைக்கவேணும் சங்கரா சம்போ

முடுக்கு

அய்யாபழனிமலையிலேரு அன்பாய்வரமுநீயுங்கோரு
மெய்யவிளங்குமுருகனைப்பாரு வேண்டியவரத்தைக்கேளு
வேதமுள்ளவர் போதமுள்ளவர் சாதகமுள்ளவர் ஷண்முகனாதர்
சண்முகநதிகளாடி சரவணபொய்கையாடி
அன்பாய்வலமாயோடி ஆரஹராமுருகாவென்றால் (சங்)

முடுக்கு

ஆதரவாய்ப்பார்த்திடுவார் அளியாவரந்தந்திடுவார்
வேதங்களோதிடுவார் மேலாய்செல்வமிகவளிப்பார்
வேலாயுதத்தன் மேலாயுள்ளவன் சிலாநற்குணன் சிந்தையிலிருப்பன்
வையாபுரிநதியில் மலைசுற்றிசோலைதனில்
அய்யன்பேர்கொண்டாடியே அன்னதானங்கள்செய்வார் (சங்)

முடுக்கு

அரஹராஎன்றசத்தம் ஆரபாரமெங்குநித்தம்
கரங்குவித்துப்பணியுவிதம் கந்தாமுருகாஎன் றுநிதம்
கருணைபெரவே அருமுகவனை பொருமையாக புகழ்ந்திடுவார் (சங்)

ஆனந்தபைரவி ஆதிதாளம்.

பல்லவி

முருகா அருகில் வாருமே மனமிரங்கி
பெருகும்வரங்கள் தாருமே

அனுபல்லவி

வருவாயரிமருகா தருவாயொருமனமாய்
சிருவனுனைப்பணிந்தேன் கருணைபெறவேயினி (மு)

சரணங்கள்

1. பாலாயெவற்குமனுகூலா பன்னிருகைவேலே
துதிப்போற்மனசிலா தொலங்குமயில்கோலா
தோகையர்கள்லோலா சூரர்கட்குக்காலா
வேதமுணர்ந்தாய்நாலா அதிசுசுகமேலா (மு)

2. சாஸ்திரமயனைக்கேட்க்கு மாத்திரம்
யவனைக்கொட்டுஞ் சூத்திரம்
அம்பிகையின் பாத்திரம்
யடியார்பேரில் நேத்திரம்
தெரிசிப்பவ ராத்திரம்
எனக்கிசைந்த தோத்திரம்
பணிந்தேனெனக் காத்திரம் திவ்யசேத்திரம் (மு)

3. வேதாக்கிருபைதரும் பாதா
மதிக்குங்குண போதா
பழனிமலை நாதா
பாவையர் சமேதா
இன்பரசங் கீதா
சொக்கலிங்கமேல் வாதா
எனக்கோற்வரந் தாதா
சங்குநிறைந்த நீதா (மு)

கீர்த்தனம் புன்னாகவராளி ஏகதாளம்

பல்லவி

சோமசுந்தரசா நான் சொந்தமுடனே தொழுவேன்
எந்தனை யுகந்தாளுவாய் (சோ)

அநுபல்லவி

காமனை எரித்தவா கையிலையங்கிரிவாசா
எமனையுதைத்திட்ட ஈசா பரமேசா (சோ)

சரணம்

1. அரஹர அரஹர அரனே பரனே
அம்பாள்மீனாக்ஷிக்கு யருளுற்றநாயகனே
திரிபுரமெரிசெய்த சிவனே பவனே
சிறந்தமதுரையில்வாழ் சிவசொக்கலிங்கனே (சோ)

2. திக்குவிசயஞ்செய்து திருக்கல்யாணங்கொள்வாய்
தினந்தினமாதுடன் திருஊஞ்சலாடுவாய்
தக்கபுகழ்பெற்ற சங்கராவெனையாள்வாய்
சம்போமகாதேவா தற்காத்தருள்புரிவாய் (சோ)

3. ஆலவாய்க்ஷேத்திரத்தில் அறுபத்துநாலுமுறை
அன்பாகவிளையாடி ஆனந்தமுற்றிதந்தாய்
காலமய்யா நீயுங் கார்த்திடவேசமயம்
காருங்காருமெந்தன் கங்காதரனேநீ {சோ}

சந்தவரைவந்தகுகநாதா என்ற மெட்டு

1. மதுரைமீனம்பிகையே தாயே உன்றன்
மைந்தனைக்கார்த்திடுவாய் நீயே நல்ல
சதுர்மறையுள்ளதொரு வாயே
அளகாயே ஜெக மாயே உன்னைத்
தஞ்சமென்றேனைக்காப் பாயே

2. சோமசுந்தரீசரிட பாரி ஜெக
ஜொலிக்குமுக்குத்தியலங் காரி சுக
சேமலவாயுள்ளசுகு மாரி
அதிகாரி கெம் பீரி எனைச்
சிந்தையிலேவைத்திடுஷய் யாரி

3. திக்குவிஜயங்களுஞ்செய் தாய் தெய்வத்
திருக்கல்யாணங்களுங்கொண் டாய் எங்கு
தக்கபுகழுள்ளவளுமா ஞய்
அளகாஞய் எனை யாளாய் மாயன்
தங்கையெனபோற்றிடமகிழ் வாய்

4. உந்தனருள் சொக்கலிங்க மீது உன
துள்ளத்தில்வையாதிது சூது நீயும்
சொந்தமாகக்கார்க்கவேணு மாது
அருளோது ஏன் வாது அதி
சுகத்தைக்கொடுத்திடுமிப் போது

கட்டளை கலித்துறை

பாம்பும் புலியும் பணிந்தேத்த தில்லைபதியில் முன்செய்
தும்புடை புல்லாங் குழல்கொண்டுபாடும் துளவணிந்தோன்
கூம்புங்கரங்கொண் டெதிர்நின்று மத்தளங்கொட்டவின் று
காம்புறள்தோளுமை பங்கா திருநடங்காட்டுவயே

கீர்த்தனம் நாதநாமக்கிரி ஆதி

பல்லவி

சிவசிதம்பரநாதா என்மேல் சித்தம்வைத்தாளும்வேதா (சி)

அநுபல்லவி

பவமகனுஞ்சிவகாமிவல்லி பாகா
பக்தர்களனுகூலா பக்தர்களனுகூலா பரமசுரூபதேவா
பரதநடனபாதா (சி)

சரணங்கள்

1. காளியுடனே கூடிவாதாடினபதை காண்கிலேனதைகேட்டதுண்டு
கனகசபைதனில் நடனம்புரிந்தவா
கையிலையங்கிரிவாசா கங்கையைத்தரித்தாசா (சி)

2. திங்களைத்தரித்துநீ திரிபுரமெரித்தாயே சிவகாமியம்மையுடன் திரு
மங்களமாகவேதான் மகாபிஷேகங்கள் [வூஞ்சலாடுவாய்
மகிழ்ச்சியுடன்புரிவாய் மாதேவாயெனையாள்வாய் (சி)

3. பக்தநந்தனுர்க்கு முத்திகொடுத்ததை பாரிலுள்ளோர் புகழ்வார்
சக்தியெனக்குமே தந்தருள்செய்குவாய்
சம்போசதாசிவனே தர்க்கார்த்திடுவாய்தானே (சி)

கீர்த்தனம் காம்போதி ரூபகம்.

பல்லவி

அம்பாள்சிவகாமியுன் செம்பொற்பாதந்துதித்தேன்
அடியேனைக்காருமம்மா (அம்)

அநுபல்லவி

செம்பொன்சிதம்பரத்தில் திருநடனமாடிடும்
தில்லைஈசன்பாரியே திருவருட்செய்யுந்தாயே (அம்)

சரணங்கள்

1. செங்கண்மாலச்சுதற்கு செல்வசகோதரியே
சிற்சபையில்நீயும் சிங்காரமாய்ப்பார்த்தாயே
மங்களமாகஆனி மார்கழிமாதந்தாயே
மகாபிஷேகம்பெற்று மகிழ்ச்சியாய்வருவாயே (அம்)

2. திங்கள்வதனம்போன்ற ஜெகமாதாயெனைநீயும்
சேயர்களைப்போலவே செல்விகண்ணால்பாரும்
எங்கும்பராபரியே ஏனோநானெனைக்காரும்
என்தாயெதிரிசூலி ஈஸ்பரன்பாரியே (அம்)

3. உந்தனிருபாதத்தை உறுதியாய்நம்பினேன்
ஒகோஜெகதீஸ்வரி ஊழ்வினைபகற்றுநின்
மைந்தன்சொக்கலிங்கம் வணங்கும்செந்தமிழ்க்கும்
வரமதுதருவாயே மங்கைசவுந்தரியே (அம்)

## ஆசிரிய விருத்தம்.

மதுரைமாநகரிலே சதுர்யுகமுதல்தனில் வளர்சாஸ்த்திரப்படியமைந்த
மகிழ்வாகமத்தியில் புகழ்பெற்றிருக்கின்ற மகிமைதிருவாலயத்தில்
அதிவிநோதமாக பயிர்க்கின்ற கோபுரமலங்காரநிழல்சோலையும்
அனந்தகோடி தீபந்தெரிசினமாலாச்சியு மருளூற்றதங்கவிமானம்
புதியதாய்தரும்புண்ய பொற்றாமரைதீர்த்தம் பூவைதிருவாசலழகும்
போற்றிடுமறையோர்கள் பள்ளியறைபொருளுள்ள பொருந்துவிதமும்
சுதியுடன்திருநடன மாடிடும்பாவனையும் தொலங்குமுன்பெருமைபுவியிற்
சொல்வதற்கொருநாவு போதாதுபெனையாள்வாய் சோமசுந்தரக்கடவுளே



# மகாவிஷ்ணு துவண.

தேவாரம்பண் சங்கராபரணம் ஆதிதாளம்.

1. அரிஹரி நாராயணு கோவிந்தா வைகுந்தா அகிலாண்டகோடி
சாந்தன்நாதா அரிராமா ஜெயராமா முராஹரியனந்தராமா அயோத்தி
நகர்தான் விளங்குபோதா கரிதனைகார்த்தவா காவேரிசுகவாசாக்
கமலரங்கநாயகிக்கிநேசா கஞ்சனைவதைத்தவா மங்கைதேவகியாலா
கன்னியர்கள் மகிழ்பெற்றவாசா

2. உரிவெண்ணெயுண்டவா இரணியனைவென்றவா உலகபதை
தானளந்தமாயா உத்தமாசர்க்குணசாமளவர்ணரூபா உள்ளத்தில்
வைத்தவர்க்குநேயா பரிபளருக்மணி சத்யபாமைக்கினிய பண்ணசு
சயனசுக மோகா பச்சம்வைத்துநீயும் ரச்சிக்ககருடனேறி
பாதுகார்க்கவந்திடுநாமா

3. ஐயனேராமாபனுதினமுன்னை அன்புடன் மனதினிலெண்ணி
மெய்புடன் ஸ்தானபானங்கள்செய்து மேன்மையாய்த்திருநாம
மணிந்து பையவேதானும் பாங்குடனுன்மேல் பணிந்துமே
பஜனைகள்செய்தால் நய்யாமல்முத்திகிடைக்குமேயிந்த நாராயணா
வென்னுநாமம்

4. சத்தியநாமம் முத்தியநாமம் சாஸ்வதபதவியும்நாமம்
சாஸ்த்திரநாமம் தோத்திரநாமம் சகலபிணிதீர்க்குமிந்தநாமம்
வெத்தியநாமம் சித்திதருநாமம் மேண்மைநள்கொடுக்குஞ்சுகநாமம்
நத்திப்பணிந்திடில் சுத்தங்கிடைக்குமே நாராயணவென்னுநாமம்

தெலுங்கு கீர்த்தனம் செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

பயமெந்துகே    ஓ மனஸா

அனுபல்லவி

ஜெயஜானகி    ரூமுனிதலுசிக்கீத
சேமந்தகலுனு    சேமந்தகலுனு    (ப)

சரணம்

1. ஆத்மசுத்திசேஷி    ஆஜாரம்பெட்டுக்கொனி
ஹரிநீபஜிஞ்சித்தே    ஓமனஸா
அரிநாராயணடுனு    மரவக மரவகா
அப்பாகிர்பாதகலுனு    தகலுனு    (ப)

2. தினமுனத்தெல்லவாறித    ஸ்தானபானமுசேஷி
திருநாமமுபெட்டுகொனி    ஓமனஸா
அனுதினமுனாமுனி    மரவகா
ஹரிகிருஷ்ணகிருபாகலுகுனு கலுகுனு    (ப)

3. பதினென்புராணலு    சங்கீதமுலுச்சதுவி
சாதகமவுனு    ஓமனஸா
பக்திசித்திப்பெட்டி    பஜனசேஷித்தே
பாபமுகலுகது    பாபமுகலுகது    (ப)

4. எப்ப பிஅ பி யெல்    எம்ம
பாஸ்சேஷசினஹானி    ஓமனஸா
இப்பஞ்சபூதமுலோ    சஞ்சலமுண்டிதே
சாதகமௌவுனு    ஓமனஸா    (ப)

ஏகாதசி கீர்த்தனம் தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி

அரியுபவாசமதை பக்தியுடனேநீங்களன்புடன்செய்வீரே

அனுபல்லவி

பெருகின்றமாதபக்ஷம்    வருகின்றதிதிகண்டு
பேணியிருப்பவர்க்கு    காணிவைகுண்டமுண்டு    (அ)

சரணங்கள்

1 தசமித்திதிகள் தனில் ஒருவேளையுணவுண்டு
ஜானகிராமனைத் தியானஞ்செய்துகொண்டு
நிசமுடனிரவினில் பாராயணங்கள்தொண்டு
நிச்சயமாய்ப்புரிந்தால் நீங்காதமோக்ஷமுண்டு (அ)

2. ஏகாதசிதிதியதில் ஏகமனதாலே
இதரவிடயங்களை சற்றுமெண்ணுமலே
ஆகாரநித்திரை யாகாதுஒருக்காலே
தேகாபிமானவிட்டா வீடாநமக்குமேலே (அ)

3. துவாதசிதிதிகளில் துகளற்றபக்தர்க்கு
சுகமுடன்தானதர்மம் செய்தவர்தனக்கு
ஆவலுடன்காலையில் அமுதுபுசித்தவர்க்கு
பாவமகன்றுபோகும் பக்தர்களனைவர்க்கு (அ)

ராமாயணகீர்த்தனம் கேதாரகௌளம் ரூபகம்.

பல்லவி

ராமா ராமாவென்பாய் மனமேயனுதினம் தினந் தினமே

அநுபல்லவி

னேமத்துடனேதுதி தினமே தினமே

172879

சரணங்கள்

1. தசரதபாலனாய் அய்யோத்தியிலுதித்தவன
தாடகையைவதைத்துத் தய்யல்சாபந்தீர்த்தவன்
புசபலத்துடனேதான்த் தனுவைவளைத்தவன்
பொன்னாஞ்ஜானகிதனை திருமணஞ்செய்தோனை (ரா)

2. பரசுராமன்கர்வம் பங்கப்படுத்தினவன்
பலவாத்யமேளத்துடன் தன்னகரமர்ந்தவன்
சிறியஅன்னையினாலே மரவுரிதரித்தவன்
சீதாலக்மணருடன் வனத்திற்கேகினவனை (ரா)

3. காத்தில்கோதண்டமேந்தி காட்டையடைந்தவன்
கங்காநதிக்குகன்மேல்க் கனிந்துநட்பானவன்
வரத்திலீரேளாண்டு வனஞ்சுகிக்கப்போனவன்
வணங்குமுனிவோரைப்பார்த்து மகிழ்ச்சியாயிருந்தவனை (ரா)

•4. பரதனிரக்கங்கண்டு பாதுகையீந்தவன்
பஞ்சவடிதீரத்தில் பன்னசாலையமர்ந்தவன்
கருதுசூர்ப்பநகாபங்கம் கனுஸ்ட்டனாலளித்தவன்
கரதூசணதிகளை களிதரவதைத்தோனை (ரா)

5. மாயராக்ஷதராலே மனமதுசுழன்றவன்
வாலியைக்கொன்றுமே வானர்சேனையைபார்த்தோன்
பாய்ந்தஅநுமானாலே பாவையைத்தெரிந்தவன்
பலசேனைபரிவாரமாய் தென்திசைஅடைந்தோனை (ரா)

6. பெருத்தவாருதிதனை அணையொன்றுசெய்தவன்
பெரபலலங்காபுரி யதனையும்பார்த்தவன்
ஸ்மரித்தவிபீஷணர்க்கு மகுடத்தையளித்தவன்
வானராதிகளாலே இலங்கையைத்தொலைத்தோனை (ரா)

7. கொடிய இந்திரசித்தன் பிரகஸ்த்தன்முதலோரை
கொல்லுமூலபலம் வெள்ளமரக்கரை
முடிபத்துராவணன்றன் அம்பிஞலருத்தோரை
மொதங்குரணகளத்தில் மொழிதரபார்த்தோரை (ரா)

8. சிங்காரமானபுட்ப ரதத்தின்மேலேரியுமே
சிரஞ்சீவிவிபீசணன் அனுமார்மற்றவருமே
தங்கமாடஅயோத்தி தன்னிலேவந்துமே (ரா)
ஜானகிசமேதராய் மகுடந்தரித்தோனை

9 அர்ப்புதராமன்பாதம் அனுதினந்துதிப்போர்க்கு
அரிஹரிராமாவென்று அன்பாய்நினைத்தவர்க்கு
சொர்க்கபதவிபெற துதிக்குமடியார்க்கு (ரா)
சொக்கலிங்கந்தமிழ்க்கு சுயவரங்கொடுப்போனை

கீர்த்தனம் தன்யாசி ஆதிதாளம்.

பல்லவி

ராமா ராமாவென்ருல் மனமே நர்க்குணசுகந்தானே

அனுபல்லவி

சேமலாபம்பெறலாம்
நேமத்துடனிருந்தால் எம்பெருமானே தினம் (ரா)
எமன்வந்தணுகிடான்

சரணம்

1. ருமதாசருக்காக சேவகராய் நவாப்பிடஞ்சென்று
மாமன்கொடுத்தசிதன மென்றுதந்து (ரா)
வாங்கினாசீதை மாயமாய்வைத்தவனே

2. கபீர்தாசருடைய தேவியாள் காரிணோமானங்காக்க
அபிமானமாகவே சுபேதராய்வந்து (ரா)
அன்பாகக்காத்திட அய்யோத்திவாசனே

3. ஏகநாதர்வீட்டில் மனமுடன் இனிகளபாகஞ்செய்தாய்
பாகமாய்பணிவிடைகள் பக்தர்கள்செய்தவர்க்கு (ரா)
சோகத்தைத்தீர்த்துமே சொற்கங்கொடுத்தவனே

4. தேவாதிதேவர்தொழும் சங்கரன் தேவிபார்வதியாரும்
ஆவலுடன்பத்தியாய் அனுமந்தன்கொண்டாடும் (ரா)
அன்பாகவிபீஷண னனேவோரும்ருமனே

கீர்த்தனம் நாட்டைக்குருஞ்சி ரூபகம்.

பல்லவி

எந்தநேரத்திலுமரவேனே யுனே யானே
எந்தநேரத்திலுமரவேனே

அனுபல்லவி

மைந்தன்பிரகாலாதனுக்காய் மாயன்றூணிலுதித்தஅடியை (எ)

சரணம்

1. வேதமுமோதுபோதமுஞ்சொல்லுஞ்சாதகமலர்ப்பாதமும்
சங்கீதமுந்தொனிநாதமுய்துவிநோதமும்பிடிவாதமுநான் (எ)

2. பரத்தையுமுந்தன்கரத்தையும்வில்லினுரத்தையுமதின்றிரத்தையும்
மாக்கர்சிரத்தையுங்கருவருத்தையும்பெருவரத்தையு ராமேஸ்புரத்
[தையுநான் (எ)

3. ஈசனே ஜெகதீசனே குகநேசனே அன்பர்பாசனே
காக்குந்தானே செய்வாசனே அய்யோத்திவாசனே ராமராஜனே
[நான் (எ)

என்னைரவிபாளவிற்குறேன் என்றமெட்டு.

பல்லவி

ராமாக்கருணை வேணுமே அருளிருந்தால்
நாமந்துதிக்கத் தோணுமே

அநுபல்லவி

ஏமன்வந்தணுகிடான் தாமோதரா உந்த
நாமத்தையென்னாளும் நாவிலெடுத்துரைக்க (ரா)

சரணம்

1. நாமமாயிரராமன் அளகுள்ளசோமன் அய்யோத்திநகர்பூமன்
அன்பர்க்கிரங்குநேமன் அருமுகவன்மாமன் அவதாரத்தில்வாமன்
அன்னைஜானகிகாமன் பரந்தாமன் (ரா)

2. பாலாதசரதர்க்குப்பாலா மதிக்குந்தெய்வசீலா யரக்கருக்குக்காலா
ஈராருநாமமாலா எவர்க்குமனுகூலா கருடனேருஞ்சாலா
கோபிகளுக்குலோலா யெங்குமேலா (ரா)

3. வேதமேசதுர்மறைவேதம் மதுமிகவிநோதம் மதிக்குங்குணபோதம்
இன்பரசங்கீதம் ராட்சதர்மேல்வாதம் ஜெயித்தபிரமாதம்
உந்தனிருபாதம் மிகவேவதம் (ரா)

4. சாஸ்திரமரியும்பிர்மகோத்திரம் மரசர்குலபாத்திரம்
அடியார்மேல்சூஸ்திரம் ஆதரியெப்மாத்திரம் எனக்கிசைத்த-
தோத்திரமுனைப்பார்ப்பவர்நேத்திரம் சேவிப்பவர்களாத்திரம்
நல்லக்ஷேத்திரம் (ரா)

கீர்த்தனம் மாஞ்சைய் ரூபகம்

பல்லவி

வருகலாமோ ஸ்ரீராமாவுந்தனடியை பணிந்துதொழ
அன்பாய் பஜனைசெய்ய

அநுபல்லவி

பரபிர்மவஸ்த்துனியல்லவோ பக்தனுன்னுமத்தைச்சொல்லவோ உந்தன்
ப்றமபதத்தைத்தேடியேநான் பார்க்கமனதிலிங்கே (வ)

சரணம்

உன்னையனுதினமும் நினைந்தேனே நான்
ஒருபோதுமரவாம விருப்பேனே
அன்னைபிதாகுரு நீதானே உன்மேல்
அன்பாய்ப்பஜனைகள் செய்வேனே
மன்னாவைகுந்தனே மங்கள பூமனே
வரதாயுனையேநான்மகிழ்ந்து தினந்துதித்திங்கே (வ)

கீர்த்தனம் புன்னாகவராளி ஆதி

பல்லவி

ராமாவரந்தருவாய் நாதா வேதா போதா கீதா

அனுபல்லவி

நேமாயுனைப்பணிந்தேன் நீதாயருள்புரிவாய்
நிமலா கமலா அமலா விமலா (ரா)

சரணம்

பத்ராஸ்தலந்தனில் பக்திசித்தியாக
பணிந்துராமதாஸர் பஜனைகள்செய்திட
வெத்திகள்தந்து மேன்மைபதவியீந்தாய்
மெய்யா துய்யா செய்யா ஐயா (ரா)
உன்னுடமகிமைகள் சொல்லிடயாவற்கும்
ஒருநாவுபோதாது உருதியாய்நம்பினேற்கு
அன்னைஜானகிலோலா அன்புடன்வருவாயே
ஆயா மாயா சேயா நேயா (ரா)

இந்துஸ்த்தான் மனமயிலேலமிட்டே என்றமெட்டு

மனமதுமகிளவே அ
னுதினமுன்ற ன்
மலரடிபணிந்தேன்ஸ்ரீ ராமா
மந்திரதந்திரம் யி
ந்திரஜாலங்க ள்
வகையொன்றுமரியேன்கன பூமா
மரவேனே மரவேனே
அருள்தருங்கோனே
மலர்ப்பாதந்தருநீகுண நேமா மாயா நேயா உன்
ஆதிஅய்யோத்தியில் தேவா அ
ன்பானதசரதன் பாலா ய
ன்னைஜானகி லோலா ம
ரக்கர்களைகொன்ற மாலா அ
ரிஹரிஎனையாள் மேலா அன்புடன் வரந்தர வா வா வா
அன்பாகத்தானே நம்பினேன்நானே
அலரிட்டயானைக்கி பலனுயளித்தவா அரிராமா ஸ்ரீராமா (மன)

திருப்புகழ் வங்காரமார்பிலணி என்றமெட்டு

1. தென்னிலங்கையரசன் சென்னிகளைகொய்திட்ட
பன்னிருநாமமுளக் கன்னிதராமன்பாதம்
அன்னிதநினையாமலடிபணிந்திட்டவர்தம் மடியார்கள்
2. சிங்காரமாகளங்குந் தங்காபரணம்பூண்டு
திங்களொளிகாந்தியுட சங்குசக்கரத்துடையோன்
தங்ககெருடனேரி மங்களமானவரந் தருவோனே
3. ஆயிரநாமாவெனுஞ் சேயர்களானபக்தர்
மாயாகோவிந்தனென்று மலர்ப்பாதமேதுதித்தால்
காயாம்புமேனியனுங்கருணைபுரிந்திடுவர் கார்போலே
4. ராமா ராமாவென்று நேமத்துடன்சேவித்து
சோமவாரஸ்திரவாரம் சுத்தபக்தியுடனே
நேமமுடன்பஜனைசெய்தோம் நீலமேகாகாப்பாய் பெருமாளே
ரெங்கராஜாயுன்னைத்தேடி நான் சேவித்தேனே உந்த

நளினபாதந்தந்து எனையும் ரச்சிப்பாய்தானே
எங்கெங்குநானலைந்துதானும் இங்குவந்தேனே
ஏனோநானுதடியை எனக்குத்தருங்கோனே (ர)
தூபதீபந்தான்மனக்குந் தொலங்குரங்கத்திலே
சொர்னவாடைதானிருக்கும் சேரமாவுன்பேரிலே (ர)
பரமபதவாசல்வழியாய் பாங்காய்வருவாயே
பக்தியுடன் பார்த்தபேர்க்கு பதவிதருவாயே (ர)
ஐயாவுன்னைப்பார்க்க அனந்தசுகமுண்டு
ஆதிவைகுண்டமென்று அளகாய்ச்சொல்வாருண்டு (ர)

ராகம் உசேனி தாளம் ரூபகம் கண்ணிகள்

1. ஸ்ரீரங்கமென்றஸ்தலமொன்றிருக்குதாம் அதைக்கண்டபேர்க்கு
ஜெனனமரணபிணிகள்நீக்கு தாம்
2. உயரங்கோபுரமிருபத்தொன்று மாம் சேவித்தபேற்கு
உள்ளங்குளிரகருணைபுரியு மாம்
3. காவேரிகொல்லடமாகப்பிரித்து மே மாலையாகவே
கனமுடன்பள்ளிகொண்டதலமு மே
4. கருடஆழ்வாருனையேபர்த்து மே துதிக்குமகிமை
கண்களாயிரந்தானும்வேணு மே
5. வாசுதேவனுந்தன்வி மானம் அனுதினமும்
மரவாமல்த்துதிப்பார்கள்தீர் மானம்
6. மாதம்மாதம்திருநாள்வி நோதம் பார்ப்போர்யாவர்
மகிழதுதிப்பாருந்தனிரு பாதம்

காவடிச்சிந்தில் மஞ்சுநகர்குந்தளமென்ற மெட்டு

1. திருவரங்கக்கமல பூமானே யனுதினமு முனைச்சேவிக்க
சிந்தைதனில்வைப்பு நேமனே என்மேல்
சித்தம்வைத்திடில் சுத்தங்கிடைக்குமே பக்தநாகவே நித்தமுன்னி
திருவடியையேத்தல்ப் பாருமே யினிப்பிறவியில்லாதினி
ஜெனனமரணநீக்கக் காருமே

2. ஏழுமதிலுங்கோபுர மான இருபத்தொன்றுமுள்ள தலமா
எங்கும்பிரசித்தமா தான சுகமா
மிக்கத்தலத்திலெந்தக்காலமுஞ் சொந்தமாகவே வந்துதுதித்து
இராருநாமமணிகு வார் இடமகின்றமார்பில்தானும்
எழிற்றுளபமாலைபூணு வார்

3. வாசுதேவனுந்தன்வி மானம் பார்த்துமகிழ்வாரிருபுரமு
மாலையாகக்காவேரி தானும் தினம்
மறையோரனவர் விரவாநாளும் முறைதவறுமறைகளோதும்
மகிமைகளைஎன்னசொல் வேனே திருவரங்கநாமந்தன்னை
ஜெகமகிழச்சொல்வாருந் தானே

4. மகாதனூர்மாதந்தனில் வேதா பூர்வபச்சஏகாதசியில்
வடக்குவாசல்சொர்கமிது நாதா பார்க்க
வருமெவர்க்கு பெருமையாக பொருமைவரந்தருகின்றதோர்
மாயரெங்கராஜனே ஐயா கிருபையாகஉந்தனிட
சேயனைக்கண்பார்த்திடு மய்யா

5. அருமையாயுன்னடிதொழும் பாலன் சொக்கலிங்கமைந்தனை நீ
ஆதரவாய்க்கார்த்திடுஞ் சீலன் உனை
அரியென்றோதக்கரியைக்காத்தாய் பிரியமாகஷிரியேன் சிந்து
அன்புடனேபாடினேன் தேவா கடைக்கண்ணால் பார்க்கத்தானுந்
தென்புடனேகார்க்கவே வாவா

பாதிராத்திரிவேளையில் என்ற மெட்டு

ஆதிசேஷசயனத்தில்த்தானுமமர்ந்திருக்கின்ற நாதா உபய
அம்மைமகிழ்ச மேதா தினம்
அன்பர்பணியும் வேதா மாயா
அத்தியைக்கார்த்ததுபோலவே அய்யனேவரந் தாதா

சோதனைசெய்யாமற்பாசதுடக்கைபோக்கிகண் பார்ப்பாய் படும்
துன்பங்களையுந் தீர்ப்பாய் பின்னர்
துய்யபாதத்திற் சேர்ப்பாய் குண
துளபமணிராஜரங்கனேசொற்னவாடையாய்க் கார்ப்பாய்

காவேரிகொல்லடமாலையாய்க்கர்த்தனேபள்ளி கொண்டாய் பொல்லா
கபடாக்கரை வென்றாய் தேவா
கடமாமுள்ளமுன் சென்றாய் உனை
கருதுபாண்டவர்க்கருள்புரிந்திடகமலேஷினி நன்றாய்

இந்தக்கோயிற்றலத்தைப்போலவேமேத்தவோர்க்கனு கூலா டன
மிரக்கந்தந்திடு மாலா புள்
ளிவரும்புண்ணிய சீலா தமிழா
வின்பமாய்ச்சொல்லுஞ்சொக்கலிங்கத்தினிருதயத்தில்வாழ் மேலா

புள்ளிக்கலபமயிர்பாக னென்ற மெட்டு

திருவாபரணமுள்ள யோகன் திவ்ய
ஸ்ரீரங்கநாயகியாள் மோகன் தினஞ்
சிந்தைதனிலேதுதிக்க வந்துஅருள்புரியுஞ்சினேகன்மன பாகன்
பெருமைதனிற்சிறந்த மாலன் பொல்லா
பெலத்தஅரக்கருக்குக் காலன் எங்கும்
பேற்பெற்றிலங்கைதனில் வேரறவதைசெய்தபெரியோன் பக்தரறியோன்
மார்களிபகல்பத்து நாதா இனி
மண்டபம்தனில்வந்த வேதா வரு
மகிமைஏகாதசியில்வருவாய்சொற்கவாசல் மாயா குணநேயா
கொட்டாயில்கூட்டமதை பார்ப்பாய் சொல்லுங்
கோவிந்தநாமந்தனை கேட்பாய் பக்தர்
கூடிபஜனைசெய்துபாடியாடுவோர்க்கு கோரி வரந்தாரீர்
திருவடிமகிமையைத் தானே ஆதி
சேடனாற்சொல்லொணாது கோனே எட்டு
திக்கினிற்புகழ்வெம்பூர் சொக்கலிங்கந்தமிட்கு தேவே வந்து காவே

ஆதிருவரங்கநகர் நாதா உன்
னடிகள்ரெண்டியோன்தொழுதேன் வேதா குண
அன்னைரங்கநாயகிச மேதா எங்கு
மகிலபூவனமோறடிதனில் சகலமுமளந்துமீயுமே

அக்ரமமாக்கதரை பாதா வைத
யம்பிறைமேலஜெயித்த போதா
வேதியனேனந்தனுக்கு நீயே சற்று
வெற்றிகொடுத்திடுவாய் சேயே வேத
வித்தகனேயருள்புரி வாயே பொல்லா
வீரசூரயிரணியாக்கனை மார்பிளக்குமாலையிட்டுமே
விரும்புபிரகலாதனைக்காத் தாயே எல்லா
வேதங்களுமுணர்ந்த மாயே
உன்தனுக்கென்மேலென்ன வாது எனக்
கொருவரமும்தாராதது சூது இனி
உன்னையல்லால்வேறுதெய்வ மேது பக்த
உண்மைசொக்கலிங்ககவிதனை நன்மையென்றருள்புரியவே
ஓதிடச்சமயமிதுப் போது சங்கர
உறுதியாகஅருகில்வந்து ஓது

பல்லவி

அப்பாவுன்பொற்பாதமறவேன் அரிஸ்ரீரங்கா

அனுபல்லவி

செப்பரியதிருவரங்கந்தனில் வாழும்
ஜெயரங்கா ஜெயரங்கா ஜெயரங்கராஜனே (அ)

சரணங்கள்

1. திங்கள்பனிரெண்டும் திவ்யவிழாக்களும்
தெருவீதிகளில்வலம் சிறப்பாய்வருவினோதம்
மங்களவாத்யங்களும் மகாபஜனையுடன்
வருவாய் வருவாய் வருவாய் வரந்தருவாய் (அ)

2. சிங்காரமாகவே தங்கக்கெருடனேறி
சித்திரைவீதியினில் முத்திதரவேஅரி
எங்கெங்குஞ்சேவித்து வந்துவார்ஆதரி
இறைவா இறைவா இறைவா எனைக்காரு (அ)

3. இந்தத்தலம்போல்வேறு எந்தத்தலமுண்டு
இதுவேஸ்ரீவைகுண்ட மெனச்சொல்வாருண்டு
வந்துசேவித்துமே மகிழ்ச்சியடைவார்விண்டு
வாரும் வாரும் வாரும் எனைப்பாரும் (அ)

கீர்த்தனம் இந்துஸ்தான் காபி ராகம் ஆதி

பல்லவி

ரங்காவுனைப்பாடினேன் நான் நத்தியே பக்தியாய் சுத்தமாய் கீர்த்தனமா(ர

அனுபல்லவி

எங்கும்பராபரவஸ்துவேஎனையாள்வாய் இன்பமாய் துன்பமற அன்பாக
நம்பிரான் (ர

சரணங்கள்

1. ஏழுமதிலுமே இருபத்தோர்கோபுரமே
எங்கெங்குபார்த்திடி லீராருநாமமே
வாழுரங்காவுனைவந்துசேவித்திடுவார் வாமனே பூமனுன் நேமமாய்
நாமனுன (ர

2. மார்கழிமாதம் வருகின்றபச்சம்
மகிமைவைகாதசி வருமலங்காரம்
ஆரால்சொல்லத்தகுமோ அதிகவினோதம் ஐயனே துய்யனே செய்யனே
மெய்யா நான் (ர)

3. கொட்டாயில்கூட்டம் கோடானகோடி
கோவிந்தாரங்காவென்று நடக்கும்பஜனையே
எட்டியமட்டும்வைகுண்டவாசனையே ராஜனே நேசனே பாசனே தாசனுன் (ர)

4. பக்தர்களோதும் பாராயணங்களோ
பாலன்சொக்கலிங்கம் செப்புஞ்செந்தமிழோ
சித்தத்தில்வைத்துசிரப்பாககாப்பாயே ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா (ர)

## தங்கமெட்டு

ஸ்ரீரங்கம் போகவேணும் ஸ்தானங்கள் செய்யவேணும்
ரெங்கனை பூசிக்கவேணும் பொங்கல்வாங்கி புசிக்கவேணும்
ராமாராமச்சந்திராசாரு எனை ரச்சிக்கஇதுசமயம்பாரு

முடுக்கு

சக்கரைப்பொங்கல் பருப்புப்பொங்கல் சம்பாப்பொங்கல் மிளகுப்பொங்கல்
தயிரோதரை புளியோதரை சகுந்தசுசவடைகள் தோசை சாப்பிடகிடைக்கும்
தாகமாற தீர்த்தங்கிடைக்கும் யாகமான பதவிகிடைக்கும் (ராமா)

எங்கெங்கும்பார்த்திட்டாலும் இராரு நாமஞ்சாத்தி
மங்காத எழிற்றுளப மாலை மார்பிலணிவார்

மாதாமாத விழாக்களும் மகாஜனக்கூட்டங்களும்
வேதத்தின்மொழிபழகும் வியானங்கள் பார்க்குவிதமும்
வேணுமென்ற மறையோர்கூட்டம் காணுகின்ற கடைகளழகும் (ராமா)

## ஆசிரிய விருத்தம்

எந்தநாளிலுமுனது பாதாரவிந்தமதை யிருதயத்தில்பதித்து
இணையற்றபக்தியுடன் ஸ்தானங்கள்செய்துமே யினியமலரானதாஞ
செந்தாமரைபிச்சி யிருவாச்சிமுல்லையும் செண்பகமல்லிமலரும்
சிறந்தவினிலுமலர்சூட்டிற்றுளபத்தாலர்ஜித்து சேவித்தஉன்னடியனை
சுந்தரனேஅச்சுதா எந்தனைநீபாராமல் சோதிப்பதுதகாது
துஸ்ட்டாபல ரென்னையும் தூசிக்கவேபார்த்து சுகமென்றிருக்கலாமா
பந்தமறயுன்மனதில் யெனக்கருள்புரிந்திட பாங்குடன்கருடனேறி
பரவாசா குகநேசா சுகவாசா ஹரிகிருஷ்ணா பாதுகார்த்தருள்புரிவையே

கீர்த்தனம் அடாணா ரூபகம்

பல்லவி

கண்ணாயுனையான்பணிந்தேன் தினமே உந்தன்
கருணைபெரயருள்தந்திட கரிகாத்திட்ட பொருளேஹரி

அனுபல்லவி

விண்ணவர் போற்றிடும் விமலாவுன்னிருபாதம்
வேதந்தனை கீதமாக நாதாதமிழாலோதிட (கண்ணா)

1. நஞ்சுமுலைப்பாலருந்து மங்கையைத்துஞ்சிடவே செய்தோன் — மாயன்
கஞ்சனையும்பொல்லாவஞ்சகமாகவே கபடமாகவதைத்தோன்
நெஞ்சைப்பிளந்து இரணியனைவென்றோன்
நேசத்துடன் பிரகலாதனைக்காத்தோன்
கொஞ்சிமுத்தந்தந்து கோபிமோகந்தீர்த்தோன்
கோலாகலசிலாயெனை பாலாபுகழ் மாலாதர (கண்ணா)

2. மண்டலமெங்குங்கொண்டாடித்துதித்திடும் மாதவனுஞ் சீலன் — பசு
கன்றுகள்மேய்த்துமே ஆயகுழலூதிஹரியனுஞ்செய்யுமாலன்

கொண்டல்மணிவண்ணனென்று புகழ்ந்தவன்
கோவிந்தநாமத்தை யெங்கும்புரிந்தவன்
அண்டினபாண்டவர்க் கருள்புரிந்தவன்
அரிஹரியேசிரியேனுக்கு பிரியமுடன்கிருபைதர (கண்ணே)

3. பக்தர்குசேலர் பாடித்துதித்துமே பார்க்கவந்தாருன்னையே—நீயும்
சித்தத்தில்வைத்துநீ முத்திகள்தந்துமே செல்வமளித்தாயே
நத்திதுதிப்போர்க்கு வெத்திதருவாயே
நாடிவருவாரை தேடியளிப்பாயே
சுத்தமாய்சொக்க லிங்கத்தைக்காப்பாயே
சுந்திரனே சந்திரனே எந்தனையுகந்தாளவே (கண்ணே)

(வேலனே இந்த வினையை ஏன்படைத்தாய் என்றமெட்டு)

பல்லவி

மாயனே நர மானிடஜெனம்படைத்தாய்—வீலை
மருமார்தர்கள் தருதுன்பமும் வருமென்பதையறிந்திந்த (மாயனே)

அனுபல்லவி

காயாம்புமேனியா உம்மைத்துதியாது
காரணம்மயிதையாதலால் நாரணனே துதிக்காதிந்த (மா)

சரணங்கள்

1. பக்திவிஸ்வாசங்கள் பாரினிற்சற்றில்லை
பலவிதமாகவே படிந்துன்பமோதொல்லை
சக்திகள்தந்துமே அன்பாதந்தரவில்லை
சாமளனே பூமாஹரி தாமோதரா நாமாயிந்த (மா)

2. கல்லைப்பெண்ணாக்கினையக் கதையாலறிந்தும்
கபடரக்கர்களை களிதரவதைத்தும்
சொல்லுமுன்சரிதை நாமத்தைமறந்தும்
துன்பமர அன்புடனே இன்பமுடன் பண்படாத (மா)

3. உந்தனையனுதினம் உறுதியாயனைப்போரும்
ஒருபோதுமறவாமல் மனதில்த்துதிப்போரும்
மைந்தன்சொக்கலிங்கம் செந்தமிழைத்தானும்
மகிழ்வாகவேபுகழுடனே சுகமில்லா தகமகிழ்ந்த (மா)

(மோகமுனைத்தாளலேனுமா என்ற மெட்டு)

பல்லவி

முத்துகிருஷ்ணையுனைப்பணிய முனிகளுருதே—எ சாமி

அனுபல்லவி

எத்திசையுந்தான் துதிப்பார் நீ
ஏழைநானென்னையைக்காப்பீர் (மு)

சரணங்கள்

1. சகடத்தைக்காலாலுதைத்துநின்றவா
தயிர்பால்வெண்ணையள்ளித்தின்றவா
மகனென்றழைக்கவோடிவந்தவா நீ
வஞ்சபூதகிதன்னையுங்கொன்றவா—மு

2. சிங்காரமாயமைந்த—பாலா
தேவிருக்மணியின்லோலா
தங்கக்கருடனேருஞ்சிலா—நீத்
தர்க்காத்தருளவாரும்மாலா மு

3 உந்தன்மகிமைசொல்லப்போமோ
ஒருவராலேப்பார்க்கத்தகுமோ
எந்தக்காலத்தில்காக்கவருமோ நீ
ஏழைக்கிரங்குப்எப்பெருமாளோ மு

கீர்த்தனம் கமாஸ் ரூபகம்

பல்லவி

தயவுசெய் கண்ணா என்
சாமிஹரி கிருஷ்ணா

அனுபல்லவி

ஐங்கரன் முருகனுக்கன்புள்ள—மாமனே
அன்னைருக்மணிக்கினியாருள்ள கோபாலனே (த)

சரணங்கள்

1. சின்னஞ்சிருபாலனாய் சிங்காரமானவா
தேவி அசோதைக்கி தெருசினந்தந்தவா
பின்னவாகனமீதில் ஹாயனஞ்செய்தவா
பிரியமாய்கோபிதன் துணையொளித்தவா (த)

2. மங்கையிரக்கங்கண்டு மகிழ்ந்து துயில்கொடுத்தாய்
மாயவாகோவிந்தா வரட நந்தகருணவாய்
செங்கணமாலச்சுதனே தீராவல்வினை தீர்ப்பாய்
தேவா—சேவா சிந்தையில்தங்கிடுவாய் (த)

3. போதும்போதுமிந்த புவியிலெடுத்தஜென்மம்
பிறந்துயிதுவரையி லலைந்தபாவகாமம்
எதுவகையறியேன் என்மீதிலேனவர்மம்
இனியாகிலுஞ்சற்று ஏழைக்கிரங்கிட (த)

நாமாவளி பல்லவி

ஸ்ரீகிருஷ்ணநாமத்தை தினந்தினம்பஜனையில்
சேவித்துச்சொல்மனமே

அனுபல்லவி

சரி—கமபதநிச சநி—தபமகரிச
சரளிவரிசையுடன் தாளக்யானமாக (ஸ்ரீ)

சரணங்கள்

மச்சவுதாரன் கூர்மவுதாரன் வாமவுதாரன்
வராகவுதாரன் காமவுதாரன் கலிங்கவுதாரன்
ராமவுதாரன் நரசிம்மரூபன் மோகவுதாரன்
கிருஷணவுதாரன் ராதாகிருஷ்ணன் ராமகிருஷ்ணன்

பாலகிருஷணன் கோபாலகிருஷ்ணன் மாயகிருஷணன்
மன்மதகிருஷணன் கோகுலகிருஷ்ணன் குழந்தைகிருஷணன்
முத்துகிருஷ்ணன் முரஹரிகிருஷ்ணன் சந்தானகிருஷ்ணன்
ராதாரமணன் வெங்கிட்டரமணன் சங்குசக்கரன்

சாரங்கபாணியான் பத்மநாபன் பக்தவச்சலன்
பன்னகசயனன் பாண்டவர்சகாயன் திரிவிக்கிரமன்
தீனதயாளன் ஆபத்பாந்தவன் அச்சுதமுகுந்தன்
அநாதரக்ஷகன் அழகுள்ளமாயன் கண்ணன்

கமலக்கண்ணன் கபடநாயகன் கஞ்சனைவதைத்தவன்
தேவகிசேயன் ருக்மணிநேயன் வேணுகோபாலன்
விமலகோவிந்தன் நந்தநந்தன் நவநிதஜோரன்
ஹாயனஞ்செய்தவன் கருடவாகனன் பார்த்தசாரதியை (ஸ்ரீ)
பாதம்பணிந்துதிதம்

கீர்த்தனம் இராகம் மோகனம் தாயம் ரூபகம்

பல்லவி

முத்துக்கிருஷணுவுமக்கு மோகனகொண்டைபின்னி முல்லைசூட்டினதாரய்யா

அனுபல்லவி

எத்திசையிலும்பார்த்தோம் எப்படிவந்தீர்மாயம்
எங்களைவிட்டேகீர்வா இதுவென்ன அனியாயம் (மு)

172

சரணங்கள்

1. மல்லிகை முல்லைரோஜா மலர்ந்த செண்பகம்கொண்டு
மகிழ முடித்தனளோ ருக்மணிதேவி மயங்கிடச்செய்தனளோ
இல்லறத்தைவிட்டு எங்குஞ் செல்லாதீரென்று
இருகையால் பின்னலாடி யேகபோகங்கொண்டு [மு]

2. பாரிஜாதபொஷ்பங்கள் பலவிதமாய்த்தொடுத்து
பார்த்து மகிழ்ந்தனளோ பாங்கி பாதஞ்சேவித்தனளோ
ஆருலரியப்போமோ அழகேசா உன்மாயம்
அன்பான எங்கள்சுவாமி ஆகாந்தமோ நாயம் (மு)

3. எங்கள் மிதினிலுமக் கென்னவர்ம மய்யா
என்னதப்பிதஞ் செய்தோம் நாங்கள் ஏது பிழைகள்செய்தோம்
மங்களமாக நீரும் மருவி எங்களைக்கூடி
மகிழ்ச்சியிருக்காமல் மாயா இங்குவாடி [மு]

4. ஆயர்பாடியில்வந்து யாருக்குந்தெரியாமல்
அள்ளி வெண்ணை பாலுண்டீர் எங்கள் ஆடையைஒளித்துக்கொண்டீர்
ஜெயகோபாலனே நெஞ்சிலெண்ணினேமோ
விமலனே வந்துமுத்தம் க்ஷேமமாய்த்தருவீர்மாயா (மு)

அம்பா மதுரை மீனாச்சி என்றமெட்டு

1. கண்ணுவுனதமலர் பாதம் நான்
கருத்தில் நினைக்க வேதம் இடைத்தால்
காச்சி தருமே கீதம் சருது
வது போதம் (கண்)

2. அப்பா என்ன இனிஎன்மேல்வாது நீ
இப்படிச்செய்வது சூது பணிந்தேன்
னிரக்கத்துடனே ஓது இது
மூலக சாது (கண்)

3. பெற்ற பாலர்களைப்போல் பாரு என்
பாவவினைகளைத் தீரு கிருஷ்ணுவுன்
பாதந்தனிலைச் சேரு பணி
வுடன் காரு

4. ரத்ன சொர்ணமணிபுமலங் காரா
சொக்கலிங்கஞ் சொல்லு தாரா ருக்மணி
சொந்த முத்தம் பெருந் தீரா சுக
கெம் பீரா (கண்)

திருப்புகழ் மலடிவயற்று என்றமெட்டு

1. கண்ணுயுனைப் பணிந்தேனே நீக்
கார்க்க இதுசமயந்தானே எனக்
கெண்ணிய வரங்கள் தருவோனே எம்பெருமானே

2. பண்ணியபாவங்களிருந்தாலே அது
பறந்தோடிப்போகு மொருக்காலே சுக
புண்ணியங்கிடைக்கு மினிமேலே புகழ்மாலே

3. ஆயர் குலத்தில் வந்துதித்தாய் நீ
யள்ளிவெண்ணைபாலுண்டாய் நல்ல
சேயனைப்போல தான்வளர்ந்தாய் திருவழகானய்

4. பஞ்சபாண்டவர்க் கனுகூலா துயில்
பாஞ்சாலிக்கி யளித்தசீலா பொல்லாக்
கஞ்சனை வதைத்த தனபாலா கார்த்திமொலா

5. சிங்காரமாக இருப்பாயே குண
தேவிருக்மணி பண மேயா தெய்வ
தங்ககருடனேரு வாயே தருவாயே

6. பக்தன் சொக்கலிங்கஞ் சொற்றமிழை இத
பஞ்சரத்தினத் திருப்புகழை உன்
சித்தம் வைத்துயெனை யாளை ஜெகப்பெருமானே

காவடிச்சிந்தில் பொன்னுலகு பென்றமெட்டு

1. தேவாதித்தேவர்க்கன்டன் தேவரனுக்கடல நண்பன்
தேவகி தன்னருமையுள்ள பாலன் நல்ல
சிறந்தருண ருக்மணியின் லோலன் நர
சிம்பரூப மாகிநீயுமே வர்பலைவத்திரி யிரணியாக்கனை
தேக விழவே மார்பிளர்த்த மாலன் மைந்த
செல்வ பிரகாலாதனனு கூலன்

2. ஆயர்பாடியில் நீயு மாருக்குந்தெரியாமலே
யன்னிவெண்ணை பாலுமுண்ட ஐயா உனைக்
கள்ளனென்றுதானு மய்யா உடனே
அடிக்க சோதையும் பிடித்து வந்துமே துடித்தயுன்னையு மடித்தகேள்க்கவே
அலங்காரமாய் வாய்திறந்தாய மெய்யா அதில்
அகில பூவனங்கள் பார்த்தா ரய்யா

3 பாண்டவர் சகாயனென்று ஆண்டவாயுனைச்சொல்லுவார்
பாஞ்சாலியுமானுதானு மன்று வருந்த
வாஞ்சையுடன் துயிலளித்த கண்ணு உந்தன்
பதினாயிரங் கோபிகள்தன் துயிலெடுத்து மறைத்து வைக்கவும்
பணிந்துவுன்னை கேட்டிடவு மென்று நீயுங்
கனிந்துபார்த்து கொடுத்தமணி வண்ணு

4. அருமையன்பாய் சொக்கலிங்கம் பெருமையுடனுன் பணிந்தேன்
ஆதிமூல கோவிந்த மோனே நான்
னேதினேனே சிந்துதனில்த் தானே மாயா
அரிநாரணு பரிபூரணு கிருபைதரவே துரிதமாக
அன்புடனே பஜனைகள்செய் வேனே உந்தனுமஞ்
சிக்கையிலிருந்தாலுது தேனே

பிர்ந்தவனக்கும்மி

பத்திபண்ணிக்கொண்டிருந்தானென்னுமெட்டு

கும்மியடித்தார் கோதார்கள் யாவரும்
கோவிந்தனைத் துதித்து

அனுபல்லவி

விம்மி மார்பில் ஸ்தனங்களசைய
கும்மியடித்திட கோபாலன்பார்த்திட (கு)

சரணங்கள்

1. பாதசரங்கள் சதங்கைபதிர பாங்குடனடியெடுத்து
வேதசங்கீததாளமேளத்துடன் விதவிதமாகவேபதங்களும்சொல்லியே
2. தங்க ஒட்யாணம் தகதகவென சரிகைப்புடவையுடன்
செங்கைவளைக் குலுங்ககுலுங்க சிங்காரமாகவே பாங்காகஆடியே
3. பத்து விரல்களும் ஒத்துமையாகவே பாங்குடன் கைமாற்றி
எத்திசையோர்களும்பார்த்துமகிழ்ந்திட ஏகபோகமாகவேகமாய்த்
தானுமே (கு)
4. அருமைபாய் சொக்கலிங்கந்தமிழை அன்புடனே புகழ்ந்து
பெருமையாகவே பேரின்பக்கும்மியை பிதாம்பரனைத் துதித்து
நினைத்து (கு)

## நலுங்கு பாட்டுகள்

பல்லவி

நலுங்குக்கு வாருஞ்சாமி
நந்தகோபால கிருஷ்ணா

1. அலங்காரமாகவேதான் அடியாளுனைப்பணிந்தேன்
கலங்கல்லாமல் வாரும் கண்ணா நலுங்கிடுவேன்
2. ஆசைக்கிசைந்தமன்னா அன்புள்ள நாயகனே
மோசங்கள் செய்திடாதீர் முத்தமிட்டு நலுங்கிடுவேன் (ந
3. தேவகிசேயாயன்னா சிங்கார ரூபாயென்னை
ஆவலுடனே பாரும் அன்பாய் நலுங்கிடுவேன் (ந
4. முத்துகிருஷ்ணாவுனக்கு மோகனகொண்டைபின்னி
பத்தத்துடனே தானு பாங்காய் நலுங்கிடுவேன் (ந
5. ஆயர்பாடியில் சீரும் அள்ளிவெண்ணைபாலுண்டாய்
சேயாகோபாலாவுன்னை நீங்காய் நினைக்கவில்லை (ந
6. பங்கயக்கண்ணாவுன்னை பார்த்திட்ட நாள்முதலாய்
மங்களமாயென்மனது வாடுதில்லை யுட்காரும் (ந

## நலுங்கு வேறுவிதம்

கண்ணிகள்

1. ஸ்ரீஹரி கிருஷ்ணனுக்கும் தேவியாம் ருக்மணிக்கும்
பேர்பெற்றமறையோர்கள் பிரியமுடனலுங்கிடவே
2. விதவிதமாய்ப்பச்சரிசி மிதமாகத்தானெடுத்து
புதியமஞ்சள் நிறமாக்கி புண்ணியர்க்கு நலுங்கிடவே
3. தெள்ளருமை மஞ்சளுடன் சிறுபயறு சேர்த்தரைத்து
எள்ளெண்ணெய் தான்கலந்து இருவருக்கு நலுங்கிடவே
4. மல்லிகை முல்லைரோஜா மரிக்கொழுந்து மருவு பச்சை
நல்லநல்ல மலர்கள்சூட்டி நலமுடனே நலுங்கிடவே
5. குங்குமமும் கஸ்தூரிப்பச்சை கோரசனங்கதம்பப்பொடி
மங்களமாயிருவருக்கும் வகைவகையாய் நலுங்கிடவே
6. எத்தனையோதேவாதிதேவர் இன்பமுடனமர்ந்திருந்து
பத்தியுடனவோருமே பரிமளமாய் நலுங்கிடவே
7. மாயகிருஷ்ணன்தான்மகிழ மங்கைருக்—மணிபுகழ
நேயமுடனே சேவித்து நேமமதாய் நலுங்கிடவே
8. பேரிகைதவல் முரசு பிரியமான நாகசுரம்
பாரிலுள்ளோர் வாசித்திடவே பதறாமல் நலுங்கிடவே

## ஊஞ்சல்

1. ஸ்ரீகிருஷ்ணன் ருக்மணியுமூஞ்சலாட
தேவாதிதேவர்களு மிகக்கொண்டாட
பேர்பெற்றமறையோர்கள் புகழ்ந்துபாட
பிரியமுடனுடிதைப் பாடினேனே
2. மங்களமாய்த் தங்கத்தினால்கால்நாட்டி
வர்ணமிகுசெம்பொன்னால் உத்திரம்பூட்டி

மங்காதரந்தினத்தால் பலகைமேரட்டி
மாயவனும்ருக்மணியுமாடியூஞ்சல்

3. தார்சிரந்தமுந்தத்தினால் கொடுங்கைசேர்த்து
தனிப்பவளகொடிபிதனால் வடங்கள்கோர்த்து
சிர்சிரந்தசித்திரங்களெங்குமயிர்த்து
ஸ்ரீகிருஷ்ணருக்மணியுமாடியூஞ்ல்

4. மல்லிகைமுல்லையினால் மாலையாட
வாசனைபுனுகு அத்தர்பன்னீராட
மெல்லியர்வெஞ்சாமரத்தை வீசியாட
விதவிதமாய்இருவருமே யாடியூஞ்சல்

5. முத்தங்கிசேர்வையுடனமர்ந்திருக்க
மூக்குத்திரத்துகளுந்தான்ஜொலிக்க
பத்தினிமாதிருபுரமுஞ்சூழ்ந்திருக்க
பச்சமுடனமர்ந்திருந்து மாடியூஞ்சல்

6. சங்கீதநாகசுரம் தவல் மேளங்கள்
தாளங்களுஞ்சகல வாத்தியங்கள்
சிங்காரமாயனுந் தேவிமார்கள்
திருவூஞ்சலாடினதை செப்பினேனே.

## பூச்செண்டாடினது

பல்லவி

செண்டாடினான் கோபாலகிருஷ்ணன்

அனுபல்லவி

மண்டலமெல்லாம்புகளுங் கொண்டருக்மணியுடன் (செ)

சரணங்கள்

1. குண்டுமல்லிகை குமு குமவெனவே
குளிர்ந்தசந்தனம் கம கமளனவே
செண்டினில்நனைத்து இருவர்தானும்
சிங்காரமாகவே பாங்காகமாரியே (செ)

2. தங்கஒட்யாணம் தக தகவேமின்ன
சரிகைப்புடவைகள் பள பளவென்ன
மங்களமாகவே சகலரும்பார்த்திட
மாதருக்மணியும் மாயகிருஷ்ணனும் (செ)

3. முத்துவயிரகடுக்க னுஞ்ஜொலிக்க
மூக்குத்திபிரகாச முகத்தினில்தொலங்க
மற்றஆபரணங்கள் வளர்புரைபோல்ஜொலிக்க
மாது மாயவனு மாரி மாரித்தானும் (செ

## ஆஞ்சநேயர் கீர்த்தனம் புன்னாகவராளி ஆதி

பல்லவி

சரணஞ்செய்தேனைய்யா ஆஞ்சநேயா

அனுபல்லவி

மரணகாலத்திலு மறவாதிருப்பதற்கு
தருணத்திலுதவிசெய்யத் தற்க்கார்க்கவருவதற்கு (ச)

சரணம்

மாதுஜானகிக்காக வாருதிதாண்டினாய்
மகிழமோதிரமீந்து வாய்ந்தவிஸ்வரூபமானாய்

சாதுவாகயிருந்து அசோகவனமளித்தாய்
சண்டாளராக்குகரை சாட்டியாளவைத்தாய்

2. இலங்கேசனிடஞ்சென்று எதிர்நின்று வாதாட
ராக்ஷதருன்வாலில் தீயதனைமூட்ட
அலங்கோலமாகவேதான் அக்கினியால்வாட்ட
அய்யன்பகவானிடம் அன்னைமொழிகூட்ட (ச

3. உன்தன்மகிமையை ஒருவராலெசொல்லப்போமோ
உருதியாய்நம்பினோர்க்கு ஒருபோதும்குறைவாமோ
மைந்தன்சொக்கலிங்கம் வணுந்தனென்பண்முனர
வணங்கினேனினிவேண்டும் வாய்வுபுத்திராசிரா (ச

## முசிரி அழகநாச்சியம்மன்மீது ஆசிரியவிருத்தம்

முசிரிநகர்தன்னிலே காவேரிநதியருகில் முன்னோர்களாலமைந்த
முதலிலொருவாலயம் உத்ரமுகமாயுள்ள முத்தளகநாச்சியம்மன்
வசமாகயிருபுரங் காவல்செய்பூதங்கள் வாசற்படிக்கிமேலே
வடிவுள்ளசந்யாசியப்பனுமன்றியும் வலதுபுமொருவாலயம்
பெசகாதிருக்கின்ற பெரியாண்டவன்சன்னதி பெரியசன்னதிக்கிஇடபுர
பெலமாயிருக்கிறு முவ்வாலயங்களில் பேசரியக்காத்தவீரன்
வசமாகருபபண்ணன் மதுரைவீரப்பனென்டு யற்றமுளபரிவாரமும்
வந்துதொழுமடியார்கள் வினையகலவே செய்யுமாதழகனுச்சியுமைபே

கீர்த்தனம் சங்கராபரணம் ரூபகம்

பல்லவி

அம்மாவுன்பொற்பாதமரவேன் அழகியே

அனுபல்லவி

செம்பொன் முசிரிநகரில் சிறப்பாய்விளங்குந்தாயே
திருசூலி திருசூலி திருசூலி எனையாள்வாய் (அ

சரணம்

1. காவேரியோரத்தில் யிருக்கின்றமகிமையும்
காசிராசன்பெற்ற மைந்தன்பெருமையும்
ஆவலுடனுன்னை யன்புடன் துதிப்போர்க்கு
அருள்தா அருள்தா அருள்தா சுகுமாரி (அ)

2. மாசிமாதந்தோரு வெள்ளிச்சமதினிலே
மகஜனங்கள்கூடி வருப்புதவாரத்திலே
பூசித்துஉந்தனுக்கு புகழ்வாய்முகூர்த்தங்கட்ட
பெருமையாயிரவினில் அருமையாய்கலைவருவாய் (அ)

3. மங்களமாகவேதான வருப்புதன் குருவாரம்
மகிழ்வாய்பொன்சப்பரத்தில் வருவாய்நகரெங்கும்
பொங்கல்மாவிளக்குடன் பூசைகள்புரிநதும்
பொருந்திட பொருந்திட பொருந்திட வருவாயே (அ)

4. சுக்கிரவாரத்திலே தொலங்குமஞ்சரோட
சுகமாயன்றிரவினில் திருநடனம்பார்த்திட
பக்தருவேளவாதய பலவிதமாகவேயும்
பாவையேஆலயம் பூவையேசெல்வாயே (அ)

5. உந்தன்மகிமையை ஒருவரால்சொல்லப்போமோ
உருதியாய்நம்பினோர்க்கு ஒருபோதுகுரவாமோ
மைந்தர்கள்பெரியோர்கள் மகிழ்ந்துதிப்பார்கள்
வருவாய் வருவாய் வரந்தருவாயே (அ)

அம்மா மதுரைமீனாக்ஷி என்றமெட்டு

முசிறியளக நாச்சி உன்
முதிர்ந்தவரங்க ளாச்சி கிடைத்தால்
முத்திகிடைக்குங் காச்சி மூவ்
வுலக சாச்சி (மு)

அம்மா வசந்தகாவேரி யோரம் காசி
மைந்தன்வீரன்சிங் காரம் பார்த்தேன்
மகிழ்ச்சியடைந்தே நேரம் வரந
தருண் பாரம் (மு)

பெற்ற பாலனைப்போல் பாரு என்
பாவவினைகளைத் தீரு பணிந்தேன்
பாதந்தனில் சேரு பாய்
கியே காரு (மு)

ரத்ன சொர்ணமணியுமலங் காரி
சொக்கலிங்கஞ்சொல்லு தாரி மாதே
ஜொலிக்கயிருப்பாளுப் யாரி சுக
தேம் பீரி (மு)

ராமமுஹிப்ரணத்பாலா என்றமெட்டு

பல்லவி

பொன்னழகித்தாயே யுனது பொற்பாத சரணம் சரணம்

அனுபல்லவி

அன்னையேநான் யுன்னை நம்பினேன்
அடியேன் சரணம் சரணம் சரணம் (பொ)

சரணங்கள்

மங்கையுந்தனிருபாதத்தை மாலை காலைவந்து துதிப்பார்
வரமும வரமும் தருவாய் தருவாய் (பொ)
உந்தனை நான் என்மனதில் உறுதியாகநம்பினேனே
உத்தமி உத்தமி வெற்றிதருவாயே (பொ)

மங்கள கீர்த்தனம் தேசிகதோடி இ-ம் ரூபகம் தாளம்

ஜெயமங்களம் ஜெயமங்களம் ஜெயமங்களமே
திங்களணிந்த சிவன் பார்வதிக்கிநல் தேவமங்களமே
தேவிசரஸ்வதி ஐங்கரன் முருகன் ஸ்ரீராமன் மங்களம்
சீதாலெச்சுமி மாதுமற்றவர் தேவதைசகி மங்களம்

சென்னைராஜதானியவர்க்கும்
செப்புதந்தி தபால் ரயிலுக்கும்
சேயன் சொக்கலிங்கந் தமிழ்க்கும்
செல்வமாயிதை படித்தபேர்க்கும்
சிங்காரமாகவே சிங்காரமாகவே சிங்காரமாகவே (ஜெ)

வாழி

வாழி ஐங்கரன் வாழி சரஸ்வதி
வாழி ஓராருதோள் வாழிஎம்பிரான்
வாழி துளபமால் வாழிஎம்மன்னைபார்
வாழி காசினி யோர்களும் வாழியே

முற்றிற்று